

சென்னை பன்னாட்டு விமானநிலையத்தில், நேற்று (01.07.2024) ஹஜ் புனிதப் பயணம் மேற்கொண்டு சென்னை திரும்பிய ஹஜ் பயணிகளுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் பொன்னாடை அணிவித்து வரவேற்றார். உடன் சட்டமன்ற உறுப்பினரும் மற்றும் தமிழ்நாடு ஹஜ் குழு தலைவர் ப.அப்துல் சமத்,சென்னை தமிழ்நாடு மாநில ஹஜ் குழு செயல் அலுவலர்/ அரசு முதன்மைச் செயலாளர் மு.அ.சித்திக், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் சா.விஜயராஜ்குமார் மற்றும் கலைமாமணி இறையன்பன் குத்தூஸ் ஆகியோர் உள்ளனர்.



விக்கிரவாண்டி இடைத்தேர்தல் விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியத்தில் எசாலம் ஊராட்சியில் 190 வது பாகத்தில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. வீதி வீதியாக சென்று வாக்கு சேகரித்தார். உடன் காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன், தலைமை செயற்குழு உறுப்பினர் எம்.எஸ்.சுகுமார், ஒன்றிய செயலாளர்கள் பி.எம். குமார், பி.எம்.பாபு, ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.கே. தேவேந்திரன், பகுதி செயலாளர்கள் கே.திலகர், சு.வெங்கடேசன் ஒன்றிய குழு உறுப்பினர் கோபாலகிருஷ்ணன் ஊராட்சி மன்ற தலைவர் கனிமொழி சிலம்பரசன். கிளை செயலாளர் முருகவேல் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### சமாஜ்வாதி கட்சியின் தலைவர்

# அகிலேஷ் யாதவ் பிறந்த நாள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜூலை 2 - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமாஜ்வாதி கட்சியின் தலைவர் அகிலேஷ்யாதவ் அவர்களுக்கு பிறந்த நாள் வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:



**பிறந்தநாள் வாழ்த்துகள் அகிலேஷ்யாதவ்!**

**உங்களின் சிறப்பான தலைமைத்துவமும், தொடர் தீவிர பரப்புரையும் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் உத்தரப்பிரதேசத்தில் சமாஜ்வாதி கட்சியைப் பெரும் வெற்றி பெறவைத்தது.**

**நம் இந்தியா கூட்டணிக்கு உங்கள் பங்களிப்புகள் மிக முக்கியமானதாக அமைந்துள்ளன. வருங்காலத்தில் நீங்கள் இன்னும் பெரிய பொறுப்புகளை வகிப்பதைக் காண ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளோம்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## கொடுமுடி ஆற்றில் விவசாயத்திற்கு தண்ணீர் திறப்பு!

நெல்லை, ஜூலை 2–

நெல்லை மாவட்டம் கொடுமுடியாறு நீர் தேக்கத்திலிருந்து கார் பருவ சாகுபடிக்காக சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு அவர்கள் மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினர் ரூபி மனோகரன், ஆகியோர் முன்னிலையில் தண்ணீர் திறந்து வைத்தார்.

நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் சித்திக், ஒன்றிய செயலாளர்கள் ஜோசப்பெல்சி, ராஜன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் பாஸ்கர்,தனி தங்கம்,செயற்பொறியாளர் அண்ணாதுரை,உதவி செயற்பொறியாளர்கள் பாஸ்கர், விக்னேஷ் மற்றும் கழகத்தினர், அரசு அலுவலர்கள்,விவசாய பெருமக்கள் கலந்து கொண்டனர்.

### இலங்கை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர்

# சம்பந்தனாருக்கு நமது வீர வணக்கம்!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி இரங்கல் அறிக்கை!

சென்னை, ஜூலை 2- திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

இலங்கையின் வெகு நீண்ட கால எதிர்க்கட்சித் தலைவராகவும், ஈழத் தமிழ்ப் பெருமக்களால் பெரிதும் மதிக்கப்பட்டவரும், ஈழத் தமிழர் வாழ்வுரிமைக்காக அந்நாட்டு நாடாளுமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் போராடிய இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மதிப்புமிகு இரா. சம்பந்தன் அவர்கள் தனது 91ஆம் வயதில் நேற்று (30.6.2024) மறைவெய்தினார் என்ற செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறோம்.

தமிழ்நாட்டிற்கு வரும் போதெல்லாம் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களையும், நம்மையும் சந்திக்கத் தவறியதே இல்லை.

எந்தநிலைப்பாட்டிலும், விவாதங்களிலும் நிதானமான போக்கை கடைப்பிடித்தொழுகிய தொண்டறச் செம்மல், மாமனிதர்!

அவரது மறைவு ஈழத் தமிழர்களுக்கு மட்டும் பெரும் இழப்பு அல்ல; சீரிய நீண்ட பொது வாழ்வில் எடுத்துக்காட்டான அவரை மதிக்கும் பிற நாட்டுத் தமிழர் சமூகத்தினருக்கும் பெரும் இழப்பாகும்!

அவரது தமிழரசுக் கட்சிக்கும், குடும்பத்தினருக்கும் ஆறுதலையும், நமது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நமது வீர வணக்கம்!

இவ்வாறு கி.வீரமணி அவர்கள், தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

### ஒன்றிய அரசின் மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து - ஜூலை 6ஆம் தேதி

# கழக வழக்கறிஞர்கள் உண்ணாவிரதப் போராட்டம்!

## என்.ஆர்.இளங்கோ எம்.பி. தலைமையில் - இரா.விடுதலை முன்னிலையில் நடைபெறுகிறது!

சென்னை, ஜூலை 2- தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., தலைமையில், சட்டத்துறை தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலையில் 29.06.2024 அன்று நடைபெற்ற தி.மு.க. சட்டத் துறை மாநில நிர்வாகிகள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள், ஆலோசனைக் கூட்டம் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் 01.07.2024 அன்று முதல் அமல் செய்ய வருகின்ற மூன்று குற்றவியல் சட்டங்கள் நீதி பரிபாலனத்திற்கும், மாநில சுயாட்சிக்கும் மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் எதிரானதாகவும் இந்திய திருநாட்டினை காவல்துறை ஆதிக்க ஆட்சி நாடாக மாற்றப்படும் என்பது குறித்து விவாதிக்கப் பட்டது.

இந்த கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டன.

**ஜூலை 5ஆம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம்!**

வரும் 5ஆம் தேதி காலை 10.00 மணி அளவில் கழக மாவட்டங்கள் ஒன்றிணைந்து மாவட்ட நீதிமன்றங்களின் வாயில் முன்பாக அந்தந்த மாவட்டத்தில் உள்ள அனைத்து வழக்கறிஞர்களையும் ஒன்றிணைத்து “கண்டன ஆர்ப்பாட்டம்” நடத்துவதெனவும், இந்த ஆர்ப்பாட்டத்தின் மூலம் நாம் வெளிப்படுத்தும் கண்டன முழக்கம் கேளா காதுகளாய் இருக்கும் ஒன்றிய அரசை தட்டி எழுப்பக் கூடியதாக இருக்க வேண்டும் என்று இந்த கூட்டம் தீர்மானிக்கின்றது.

தற்போது அமல்படுத்தியுள்ள மூன்று குற்றவியல் சட்டங்களை எதிர்த்து தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., தலைமையில், சட்டத்துறை தலைவர் மூத்த வழக்கறிஞர் இரா.விடுதலை முன்னிலையில் வருகிற 06.07.2024 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 6:00 மணி வரை எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகில் உண்ணா விரதப் போராட்டம் நடத்துவது என்று தீர்மானிக்கப் பட்டது.

இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் தமிழகம் முழுவதும் இருந்து வழக்கறிஞர் அணியினர் திரளாக பங்கேற்று உண்ணாநிலை பேராட்டத்தை வெற்றி அடைய செய்து, நம்முடைய கண்டன குரலை ஒன்றிய அரசுக்கு தெரியப் படுத்தும் விதமாக வழக்கறிஞர் அணியினர் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**கண்டன கருத்தரங்கங்கள்!**

ஒன்றிய அரசால் அமல்படுத்தப்பட்டுள்ள மூன்று குற்றவியல் சட்டங்களின் பாதகங்களை வழக்கறிஞர்கள் மட்டும் இன்றி பொது மக்களும் அறிந்திடும் வகையில் தமிழ்நாடு முழுவதும் கண்டன கருத்தரங்கங்கள் நடத்துவது என்றும், இந்த கருத்தரங்கத்தில் கட்சி பாகுபாடு இல்லாமல் அனைத்து வழக்கறிஞர்களும் பங்கு எடுத்துக் கொள்ளக் கூடிய வகையில் அரங்க கூட்டங்களை ஏற்பாடு செய்து அதில் பொது மக்களையும் பெருமளவில் கலந்து கொள்ள செய்வது என்று இந்த கூட்டம் தீர்மானிக்கின்றது.

இவ்வாறு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

### காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளையும் இழிவுபடுத்தும் வகையில் பேசி வருகிறார்!

# மக்கள் பிரச்சினை குறித்து பிரதமர் மோடி பேசுவதில்லை!

## மாநிலங்களவையில் மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூலை 2–

பிரதமர் மோடி, காங்கிரஸ் உள்ளிட்ட அனைத்து எதிர்க்கட்சிகளையும் இழிவுபடுத்தும் வகையில் தொடர்ந்து பேசி வருவதாக மாநிலங்களவையில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுனகார்கே குற்றம்சாட்டினார். அவர் பேசிக்கொண்டிருந்த போது பா.ஜ.க. உறுப்பினர்கள் இடையூறு செய்து முழக்கமிட்டதால் அவையில் அமளி நிலவியது.



மாநிலங்களவையில் பேசிய காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்கள் பிரச்சினைகள் குறித்து பிரதமரும் பேசுவதில்லை, பா.ஜ.க.வும் பேசுவதில்லை என விமர்சித்தார். மத்திய பிரதேசம் உள்ளிட்ட பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் பட்டியல் சமூக பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக குற்றம்சாட்டிய கார்கே, விசாரணை அமைப்புகளை பயன்படுத்தி பெரும் முறைகேடுகள் அரங்கேற்றப் பட்டிருப்பதாக கண்டனம் தெரிவித்தார்.

தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்புகள் மூலம் பங்குச்சந்தையில் பெரும் முறைகேடு நடந்திருப்பதை சுட்டிக்காட்டிய கார்கே, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளை இழிவுபடுத்தும் விதமாக பிரதமர் மோடி பேசியதை ஊடக செய்திகளின் ஆதாரங்களுடன் எடுத்துரைத்தார். அவரை தொடர்ந்து பேச விடாமல் ஆளும் பா.ஜ.க. எம்.பி.க்கள் முழக்கமிட்டதோடு மாநிலங்களவை தலைவரான ஜெகதீப் தன்கரும் குறுக்கீடு செய்தார். கார்கேவின் பல கருத்துக்களை அவைக்குறிப்பில் இருந்து நீக்குவதாகவும் அறிவித்தார்.

விசாரணை அமைப்புகள் மூலம் நடைபெற்றுள்ள முறைகேடுகள் உள்ளிட்ட பிரச்சனைகளை எழுப்ப காங்கிரஸ் மூத்த உறுப்பினர் பசிதம்பரம் முயற்சித்த போது அவரையும் பேச விடாமல் அவைத்தலைவர் அனுமதி மறுத்தார்.

ராணுவகத்தில் ஆர்.எஸ்.எஸ் குறுக்கீடு குறித்து மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்த கருத்துக்களையும் அவைக்குறிப்பில் இருந்து நீக்குவதாக ஜெகதீப் தன்கர் அறிவித்தார். இதற்கு தி.மு.க. எம்.பி. திருச்சி சிவா உள்ளிட்டோர் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் அவர்களையும் அவைத்தலைவர் பேச அனுமதிக்கவில்லை. இதனால் மாநிலங்களவையில் தொடர்ந்து அமளியும் பரபரப்பும் நிலவியது

### விக்கிரவாண்டி இடைத்தேர்தல் - அன்னியூர் சிவாவை ஆதரித்து பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. தலைமையில்

# நந்திவாடி ஊராட்சியில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வீடு வீடாக வாக்கு சேகரிப்பு!

## இ. ஜோசப் அண்ணாதுரை - இ. எஸ். பெர்னார்ட்- ஏ.கே.கருணாகரன் பங்கேற்பு!

விக்கிரவாண்டி, ஜூலை 2 - விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் பல்லாவரம் வடக்கு, தெற்கு பகுதி திமுக மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க-க்கு தேர்தல் பணியாற்ற ஒதுக்கப்பட்டுள்ள. நந்தி வாடி ஊராட்சி பாக எண் 137 க்கு உட்பட்ட பகுதிகளில் விக்கிரவாண்டி மேற்கு ஒன்றிய தேர்தல் பணி பொறுப்பாளர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா. மோ. அன்பரசன், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ தலைமையில் பாக பொறுப்பாளர் பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை மற்றும் பல்லாவரம் தெற்கு பகுதி கழகச் செயலாளர் இ. எஸ்.பெர்னார்ட், செம்பாக்கம் வடக்கு கழக செயலாளர் ஏ. கே. கருணாகரன், பொதுக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா ஆகியோர் முன்னிலையில் வீடு வீடாகச் சென்று திராவிட மாடல் அரசு முதலமைச்சர் தளபதி அவர்களின் சிறப்பான திட்டங்களான மகளிர் உரிமைத் தொகை இலவச பேருந்து வசதி நான் முதல்வன் திட்டம் கல்லூரி மாணவிகள் மற்றும் மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் மற்றும் அரசின் பல்வேறு பல்வேறு சிறப்பு திட்டங்களை பொதுமக்களிடம் எடுத்துரைத்து சமூக நீதி காத்த நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உங்களின் ஆதரவு அளிக்க வேண்டும் என்றும்,

இந்த கிராமத்திற்கு பல்வேறு நல்ல திட்டங்களை கடந்த சட்டமன்ற உறுப்பினர் கொண்டு வந்தார் இன்னும் பல்வேறு திட்டங்களை நமது வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா தொகுதிக்கு கொண்டு வருவார்.

எனவே நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் உங்கள் வீட்டுப் பிள்ளையான அன்னியூர் சிவாவை வெற்றி பெற செய்யுங்கள் எனகூறி வாக்கு சேகரித்தார்.

அப்பொழுது கிராமத்தைச் சேர்ந்த 400க்கும் மேற்பட்ட மகளிர் திரண்டு இருந்து வரவேற்பு அளித்தனர். இதில் க. ரமேஷ், ச. சிவகுமார், ஜெ. வி. சந்திரசேகர், ஜி.கருணா, மூர்த்தி, கோ. ஜானகிராமன், ஜெ. இன். சாமாம். எம். இளவரசன். லோ. டில்லிபாபு. எம். கமல்ராஜ். பி.கிஷோர். மணிரத்தினம். ஏ. டீசல் ராஜா மற்றும் நந்தி வாடி ஊராட்சி கழக செயலாளர் டீ. சாரதி ஊராட்சி கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்

# தி.மு.கழக மாணவர் அணி சார்பில் ஆர்ப்பாட்டம்!

## சென்னை தெற்கு மாவட்ட மாணவர் அணி நிர்வாகிகளுக்கு அமைப்பாளர் பா.அருண்குமார் வேண்டுகோள்!

சென்னை, ஜூலை 2- சென்னை தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பா.அருண்குமார் வேண்டுகோள் வருமாறு:

நீட் தேர்வே தமிழ்நாட்டிற்கு தேவையில்லை என்பதற்காக தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏற்கனவே நிறைவேற்றி அனுப்பியிருக்கும் சட்டமசோதாவிற்கு உடனடியாக ஒப்புதல் தராத நிலையில், (28.6.2024) தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நீட் விலக்கு சட்ட முன்வடிவிற்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் அளித்திட வலியுறுத்தி தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள், முன்மொழிந்து ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை உடனடியாக செயல்படுத்திட வேண்டுமென்றும் நீட் தேர்வில் நடைபெற்றுள்ள மிகப்பெரிய மோசடிகளை, குளறுபிடிகளை களைவதற்கு மேல்நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், நீட் எத்தனை மரணங்கள் நிகழ்ந்தாலும், நீட் தேர்வை நடத்தியே தீருவேன் என்ற எதேச்சதிகாரப் போக்கினை கடைபிடிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து 3 ஜூலை, 2024 அன்று காலை 9 மணி அளவில் கழக மாணவர் அணி சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் பெருந்திரள் ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவுறுத்தலின்படி, கழக மாணவர் அணி செயலாளர் சி.வி.எம். பி.எழிலரசன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெரும் ஆர்ப்பாட்டத்தில் சென்னை தெற்கு மாவட்ட மாணவர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி மாணவர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பா ளர்கள் மற்றும் ஒன்றிய அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கல்லூரி அமைப்பு சார்ந்த தோழர்கள் நிர்வாகிகள் மற்றும் கல்லூரி நண்பர்கள் பெருந்திரளாக பங்கேற்க கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து சென்னை தென்மேற்கு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள வி.சாத்தனூர் பகுதியில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தார்.உடன் ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ,பகுதி செயலாளர்கள் நந்தனம் கி.மதி,கே.ஏழுமலை, மாவட்ட துணை செயலாளர் கோடம்பாக்கம் மு.சத்யா வட்ட செயலாளர்கள் ந.மோ.முரளி,கே.எஸ். வெல்டிங் ராஜா, தாஸ்,ஜெயக்குமார்,மாரி உள்ளிட்ட கழகத்தினர் வாக்கு சேகரித்தனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவரங்கம் க.இராசவேலு
### ஜூலை 2 (2013)



நீதிக்கட்சி குடும்பத்தைச் சேர்ந்த இவர், பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, பின்னர் கழகம் துவங்கப்பட்ட போதே, கழகத்தில் இணைந்து பணியாற்றத் தொடங்கியவர்.

திருவரங்கம் பகுதியில் கழகம் வளர பாடுபட்ட மூத்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

மதி எனும் இதழை நடத்தியும், நாடகங்கள் எழுதி அதில் நடித்தும், ‘செண்பகத் தமிழ் அரங்கு’ எனும் தமிழ் அமைப்பினை தொடங்கி, அதன் மூலம் ஆயிரக்கணக்கான தமிழிலக்கியக் கூட்டங்கள் நடத்தி தமிழ் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் நகர்மன்ற எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றி அந்நகர வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் ரங்கநாதர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

2010ல் தமிழ்ச் சான்றோர் பெருமக்களுக்கு வழங்கும் விழாவில் ‘அகவை முதிர்ந்த தமிழறிஞர்’ எனும் விருதினை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**